# தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு




தொகுப்பாசிரியர்கள்

**பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா**

**ப. கணேசலிங்கம்**



குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2011

தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு
தொகுப்பாசிரியர்கள்: பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா, ப. கணேசலிங்கம்
பதிப்புரிமை © 2011 (தொகுப்பு நூலுக்கு)
குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 6, தொ.பே. 011 2364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-10

Hindu Culture in South East Asia
Edited By S.Krishnaraja & P. Ganeshalingam

First edition © 2011

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo - 6, Tel. - 011 2364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 6

வெளியீட்டு எண்: 480

ISBN 978-955- 659-293-1

அட்டையில் : கம்போடியாவில் உள்ள கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற ஆங்கோர்- வாட் கோயிலும் கி.பி. 879இல் கட்டப்பட்ட பிரேய்க்-கோ கோயிலில் உள்ள சிற்ப வேலைப்பாடும்.

# 1

# தென்கிழக்காசியா: ஓர் அறிமுகம்

சாந்தினி அருளானந்தம்

'தென்கிழக்காசியா' (Southeast Asia) என்ற தொடர் ஆசியாக்கண்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள இந்தோ - சீனத் தீபகற்பத்தையும் அதனை அடுத்துள்ள இந்தோனேசிய பிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டங்களையும் குறிக்க 2 ஆம் உலக மகாயுத்தத்தன்போது உபயோகிக்கப்பட்டது. உண்மையில் இந்தியாவிற்குக் கிழக்கேயும், சீனாவிற்கு தெற்கேயும், அவுஸ்திரேலியாவிற்கு வடக்கேயும் அமைந்துள்ள பகுதியே தென்கிழக்காசியா என அழைக்கப்படுகின்றது. இந்தியாவிலிருந்து ஜப்பான் வரை பரவியுள்ள நாடுகள் தூர கிழக்கு (Far East) நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றுள் தென்கிழக்கு ஆசிய நாடுகளும் அடங்கும்.

தென்கிழக்கு ஆசியாவானது புவியியல் அடிப்படையில் இரண்டு அமைப்புக்களைக் கொண்டதாக விளங்குகின்றது. முதலாவது பிரிவு, தென்கிழக்கு ஆசியத் தரை நிலப்பகுதியில் அமைந்துள்ள இந்தோ - பசுபிக் தீபகற்பப் பகுதியாகும். இப்பிரிவினுள் பர்மா, தாய்லாந்து, மலேசியா, வியட்னாம், கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகள் உள்ளடங்குகின்றன. மற்றைய பிரிவு, நான்கு பக்கங்களும் சமுத்திரத்தால் சூழப்பட்ட தீவுக்கூட்டங்களை உள்ளடக்கிய நாடுகளாகும். இப் பிரிவினுள் சுமாத்திரா, யாவா, போர்ணியோ, பாலித்தீவுகள், செலிபஸ் ஆகிய தீவுகளை உள்ளடக்கிய இந்தோனேசியா நாடும் பிலிப்பைன்ஸ், கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகளும் உள்ளடங்குகின்றன.

தென்கிழக்காசியாவின் புவியியல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. அவ்வகையில் தென்கிழக்கு ஆசியத் தரைநிலப் பகுதியும், தீவுகளும் இந்திய பசுபிக் பெருங்கடல்களுக்கிடையே சிறு சிறு வாயில்களைக் கொண்ட அரண்களைப் போல் அமைந் துள்ளன. நான்கு திசைகளிலும் இருந்து வந்து ஒன்றாகக் கூடும் நில, நீர்ச் சந்திப்புக்கள் இங்கு அமைந்துள்ளன. தென்கிழக்காசியாவில் உயர்ந்த மலைகளும் வேகம் மிக்க நதிகளும் உள்ளன. மேலும் எரிமலை கக்கிய வளமிக்க மண்ணும் இப்பிராந்திய செழிப்புக்கு அடிப்படையாகக் காணப்படுகின்றது. இது தவிர காடுகளும், கனிய வளமும் அதிகம் உள்ளதோடு பல துறைமுகங்களும், வாணிபம் செழிப்படைந்த மையங்களும் இங்கு உள்ளன.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஆறுகளில் மிகவும் நீளமான ஆறுகளாக ஐராவதி, சல்வின், மீனம், சௌபிராயா, மீக்கொங் ஆகிய ஆறுகள் காணப்படுகின்றன. மேலும் தென்கிழக்காசியாவின் முக்கிய மலைகளாக காசின், டபூனான், கூஷான், லோவாஸ், அரக்கன்-யோமா, பெருயோமா போன்றன விளங்குகின்றன. முக்கிய துறைமுகங்களாக ரங்கூன், சிங்கப்பூர், பினாங், மலாக்கா, பட்டேவியா, பாண்டம், ஜகார்த்தா, மகாசர், மணிலா போன்றன காணப்படுகின்றன.

தென்கிழக்கு ஆசியாவின் எல்லாப் பாகங்களிலும் வருடம் முழுவதிலும் வெப்பநிலை சீரானதாகக் காணப்படுகின்றது. தென்கிழக்கு ஆசியப் பகுதியில் நிலப்பகுதி மத்தியகோட்டைச் சார்ந்து அமைந்திருப்பதனாலும், பெரிய நீர்ப்பரப்பைத் தன்னகத்தே அடக்கி யிருப்பதனாலும் வெப்பம் எல்லாப் பாகங்களிலும் எல்லாக் காலங் களிலும் சீரானதாக உள்ளது. நிலவமைவுப் போக்கு, தரைத்தோற்றம், காற்றுக்கள் ஆகியன காரணமாகத் தென்கிழக்கு ஆசியாவிற் பெரும் பகுதி வருடத்தில் 80 அங்குலத்திற்கும் அதிகமான மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. தென்கிழக்காசியா 5,000,000 சதுர கி.மீ பரப்பளவை உடையதாகக் காணப்படுகின்றது. மேலும் சனத்தொகையானது 593,000,000 ஆக இன்று விளங்குகின்றது.

தென்கிழக்காசியாவையும் அதிலுள்ள நாடுகளையும் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பெயர்களால் அழைத்தனர். அவற்றை கீழை இந்தியத் தீவுகள் என்றும், நெதர்லாந்து இந்தியத் தீவுகள் என்றும், டச்சு இந்தியத் தீவுகள் என்றும் அழைத்தனர். மலேசி




ஆசியாவில் தென்கிழக்காசியாவின் அமைவிடம்

யாவையும், இந்தோனேசியாவையும் இணைத்து மலேசியா என்றும் பர்மாவையும் இந்தியாவுக்குக் கிழக்கில் உள்ள பகுதியையும் அகண்ட இந்தியா, கீழை இந்தியா, பரந்த இந்தியா என்றும் அழைத்தனர்.

மேலும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள பகுதியை இந்தோ - சீனா என அழைத்தனர்.

தென்கிழக்காசியா இன்று மனிதவியல் வல்லுனரின் சுவர்க்கமாக விளங்குகின்றது. இங்கு வாழ்ந்த புராதன மனித வர்க்கப் பிரிவுகளின் பிரதிநிதிகளாகப் பல்வகைப்பட்ட மக்கள் இனங்கள் இன்றும் மலைகளிலும், பீடபூமிகளிலும், காடுகளிலும் வசிக்கின்றனர். இவர்களுள் 'நெக்கிரிதோக்குக் குள்ளர்கள்' எனும் நாடோடிகள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் அவுஸ்திரேலியாவின் ஆதிக்குடிகளை ஒத்தவர். ஏனையோர் அபிவிருத்தி அடையாத நிலையில் உள்ள இந்தோனேசியராகக் காணப்படுகின்றனர். காலப்போக்கில் ஆதிக்குடிகளும் பின்வந்தவர்களும் கலந்துவிட்டனர். மேலும் இந்தோனேசிய இனத்தவரே தென்கிழக்கு ஆசிய மக்கள் தொகையில் இன்று பெரும்பான்மையாக உள்ளனர். தென்கிழக்கு ஆசிய மக்களிடையே காணப்படும் அடிப்படை ஒற்றுமைகளை நோக்கின் பொதுவான


காலநிலை, பாசனமுறை, விவசாய அமைப்புக்கள், எருமை வளர்ப்பு, உலோக உபயோகம், ஆன்மீக தத்துவம், மூதாதையர் வணக்கம், உயரமான இடங்களில் கோயில்களை அமைத்தல், இறந்தவர்களைப் புதைத்தல், சகுனம் பார்த்தல், எண் '7' இற்குச் சிறப்புத் தருதல், மாயமந்திர நம்பிக்கை, பெண்ணுக்கு மதிப்பு அளித்தல், பொம்ம லாட்டம், நிழலாட்டம் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

தென்கிழக்காசிய நாடுகளைப் பொறுத்தவரை பலதரப்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. அவ்வகையில் மலேயாத் தீபகற் பத்திலும் பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட தீவுக்கூட்டங்களிலும் மலாய், பொனீஷிய மொழிகளும் பர்மா, சயாம், கம்போடியா, வியட்நாம், மலாய் ஆகிய இடங்களில் அவுஸ்திரேலிய - ஆசியமொழிகளும் பேசப்படுகின்றன. தென்கிழக்கு ஆசியாவில் இந்து மதமும் பின்னர் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியனவும் வாணிபத் தொடர்பு களால் வந்திறங்கின. சமயத்தைப் பொறுத்த வரையில் இந்தோனேசி யாவிலும், மலேசியாவிலும் வாழுகின்ற மக்களுள் பெரும்பான்மை யானவர்கள் முஸ்லீம்களாவர். பர்மா, தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் பௌத்த மதத்தினர் அதிகம் உள்ளனர். பிலிப்பைன்ஸிலோ 95 வீதத்தினர் கிறிஸ்தவர்கள் ஆவர். அடுத்து தற்காலத்திலே 98 வீதமான இந்துக் களைக் கொண்டு விளங்கும் பாலித்தீவிலும் பௌத்த மதமானது குறிப்பிடத்தக்களவு சிறப்புப் பெற்றிருந்தது. எனினும் தென்கிழக்காசிய மக்களிடையே ஆதிகாலச் சமயக் கருத்துக்களும், பழக்கவழக்கங்களும் அழிந்து விடாமல் மிக்க உறுதியுடன் இருந்து வந்துள்ளன.

தென் கிழக்காசியாவிலுள்ள நாடுகளை சற்று விரிவாகப் பார்ப்போம்.

## தாய்லாந்து

உலகத்தில் 'தாய்நாடு' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பெறுவது தாய்லாந்து ஆகும். தாய்லாந்தில் வழங்கப்படும் 'தாய்' என்ற சொல்லுக்கு 'சுதந்திரம்' என்பது பொருளாகும். தென்கிழக்காசிய நாடுகளில் மேலைநாட்டுக் காலனித்துவத்திற்கு உட்படாமல் சுதந்திரமாக இருந்த நாடு தாய்லாந்து ஒன்றேயாகும். முன்பு இது




'சையாம்' என அழைக்கப்பட்டது. பின்பு இது தாய்லாந்து என்று தன் பெயரை மாற்றிக்கொண்டது. தென்கிழக்காசியாவில் தாய்லாந்துக்கு முக்கியமான இடமுண்டு. மேற்கே பர்மாவையும், தென்முனையில் மலேசியாவையும், தென்கிழக்கே லாவோசையும் அண்டை நாடுகளாகக் கொண்டிருப்பதுடன் வட எல்லையில் இமயமலைத் தொடரையும் தனது எல்லைகளாகக் கொண்டு விளங்குகின்றது. மேலும் பூகோள அமைப்பில் தாய்லாந்து வடமேற்கு மலைத்தொகுதி, மத்திய சமவெளி, கோரட் பீடபூமி, தீபகற்ப தாய்லாந்து என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்திற்கு 'புன்னகைப்பூமி' என்றும் பெயருண்டு. ஏனெனில் தாய்லாந்து மக்கள் எல்லா நாட்டு மக்களிடமும் நட்புணர்வோடும், புன்னகைபூத்த முகத்தோடும் பழகுவதனால் இப்பெயர் ஏற்பட்டது. தாய்லாந்தின் தலைநகரம் பாங்கொக் ஆகும். தாய்லாந்திலுள்ள வளமான சமவெளியும், பனிமூடிய இமயமலைத் தொடரும்

தாய்லாந்து பெற்ற இயற்கைச் செல்வங்களாகும். தாய்லாந்தில் மத்திய சமவெளி வழியாக சாவ்பியா நதி ஓடுகிறது. 300 கி.மீ. நீளமுள்ள இந் நதி தாய்லாந்தின் நைல் நதியாகக் கூறப்படுகின்றது. தாய்லாந்திலுள்ள உயரமான மலைச்சிகரம் 'ரூய் இந்தானான்' ஆகும். இதன் உயரம் 2596 மீட்டர் ஆகும். மேலும் தாய்லாந்தின் தென்பகுதியில் 'சாமுய தீவு', 'புகட்தீவு' போன்றன காணப்படுகின்றன. தாய்லாந்தில் 67,764,000 மக்கள் வாழ்கின்றனர். இங்கு வாழ்கின்ற மக்களில் தாய் இன மக்கள் 80% ஆகவும், சீனமக்கள் 10% ஆகவும், மலாயா மக்கள் 4% ஆகவும், லாவோஸ், பர்மிய, வியட்நாமிய, இந்திய மக்கள் 6% ஆகவும் காணப்படுகின்றனர். மேலும் தாய்லாந்தின் நாணயம் பாட் (Bhat) என அழைக்கப்படுகின்றது.

தாய்லாந்து நாட்டின் தேசியக்கொடியில் சிவப்பு, வெள்ளை, ஊதா போன்ற நிறங்கள் உள்ளன. இவற்றில் ஊதா நிறம் அரசரையும், சிவப்பு நிறம் தேசத்தையும், வெள்ளை நிறம் பௌத்த மதத்தையும் குறிக்கிறது. தாய்லாந்தின் பொருளாதார நிலையை நோக்கின் இங்கு 85% மான கிராம மக்கள் பெரும்பாலும் விவசாயிகளாகவே உள்ளனர். தாய்லாந்தின் முக்கியமான விளைபொருள் நெல் ஆகும். இறப்பர், சோளம், பருத்தி, புகையிலை, பீன்ஸ், கரும்பு ஆகியனவும் ஓரளவு பயிரிடப்படுகிறன. இந்நாட்டின் மிக முக்கியமான ஏற்றுமதிப் பொருளாக அரிசி காணப்படுகிறது. விவசாயம் மட்டுமன்றி ஆடு, மாடு, பன்றி வளர்த்தல், மீன் பிடித்தல் ஆகியனவும் முக்கிய தொழில் களாகும். தாய்லாந்தின் வருமானத்தில் ஒரு பகுதி தாதுக்கள் மூலம் கிடைக்கிறது. தீபகற்ப தாய்லாந்தில் ஈயம் அதிகம் உள்ளது. இரும்பு, காரீயம், நிலக்கரி, ஜிப்சம் ஆகியனவும் ஓரளவு கிடைக்கின்றன. உலக ஈய உற்பத்தியில் தாய்லாந்து மூன்றாம் இடம் வகிக்கிறது.

தாய்லாந்து மொழியைத் 'தாய்மொழி' என்றும் 'சயாம்மொழி' என்றும் அழைப்பர். பழங்காலத்தில் இந்தியாவிலிருந்து பௌத்த மதம் தாய்லாந்துக்கு வந்தபோது அதனோடு கூடவே சமஸ்கிருத மொழியும், பாளி மொழியும் வந்தன. சீன மொழியுடன் ஏற்பட்ட இவற்றின் கலப்பே இன்று தாய்மொழியாகக் காணப்படுகின்றது. சில தமிழ் சொற்களும் தாய்மொழியில் காணப்படுகிறன. சான்றாக 'நெய்' என்பதை 'நேய்' என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்தில் நிலவுகின்ற சமயநிலையை நோக்கினால் இந்நாட்டின் அரசாங்க மதம் பௌத்தம் ஆகும். 94% மக்கள் பௌத்த மதத்தினர், 4% மக்கள் இஸ்லாமியர், 1.5% மக்கள் சீனக் கன்பியூசிய மதத்தினர், 0.5% கிறிஸ்தவர்கள். தாய்லாந்தின் சமூகத்திலே மன்னனும் சரி, மக்களும் சரி வாழ்க்கையில் ஒரு முறையாவது பிக்குவாக இருந்தாக வேண்டுமென்ற நடைமுறையிருந்தது.

**பர்மா (மியன்மார்)**

தென்கிழக்கு ஆசியத் தீவுத்தொடர்களின் புவியியற் சூழலுக்கும் மேற்கு சீனா, இந்தியா ஆகியவற்றின் மலைசார் சூழலுக்கும் இடைப்பட்ட நிலைமாறு நிலப்பகுதியில் பர்மா அமைந்துள்ளது. பர்மாவின் 3 முக்கிய பௌதீக உறுப்புக்களாக மேற்கு மலைத்தொகுதி, சான் உயர்நிலம், ஐராவதி வடிநிலம் என்பன காணப்படுகின்றன. இன்று மியன்மார் எனும் பெயரால் வழங்கப்படும் இந்நாடு 676,578 சதுர கி. மீ பரப்பைக் கொண்டதாகவும், 50,020,000 சனத்தொகையுடைய தாகவும் விளங்குகின்றது.

பர்மாவின் உயர் அகலக்கோட்டுத்தன்மை, மிகையான உயரம், கண்டம் சார்ந்த உள் அமைவு என்பன தென்கிழக்கு ஆசியாவின் ஏனைய பகுதிகளை விட பர்மாவில் வெப்பநிலை குறைவாக இருப்பதற்குக் காரணமாகும். இந்தியாவின் பருவமழை போன்று இங்கும் மழை சடுதியாகப் பெய்கிறது. ஏப்ரல், மே மாதங்களில் மிகக் கூடிய வெப்பம் ஏற்படுகிறது. பர்மாவில் அயன மழைக்காடுகள் பரந்துள்ளன. வர்த்தக தேவைக்காக பாலை, தேக்கு முதலிய மரங்கள் பெறப்படுகின்றன. பர்மிய வீடுகள் மூங்கில், பனையோலை போன்ற வற்றால் வேயப்படுகின்றன.

பர்மிய மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாவர். இங்கு குன்றுப் பயிர்ச்செய்கை, வறண்டவலயப் பயிர்ச்செய்கை, கழிமுகப் பயிர்ச்செய்கை என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் கனிய வளங்களும் இங்கு பெறப்படுகின்றன. பெகூயோமா வின் வடமேற்கில் பெற்றோலியம் காணப்படுகின்றது. மோகோக் சுரங்கத்தில் இரத்தினக் கற்கள் பெறப்படுகின்றன. தகரம், வெள்ளி, ஈயம் போன்றனவும் பெறப்படுகின்றன.

இன்றைய பர்மியரின் மிக முக்கியமான பகுதியாக வறண்ட வலயம் உள்ளது. பர்மியரின் உடற்கூற்றுத் தன்மை பண்பாடு என்பன மொங்கோலிய இனத் தொடர்புடையன. இங்கு மோன்ஸ் எனும் இனத்தாரின் பண்பாட்டுக்கு கலப்பு அதிகமாகும். அவர்களது மொழி ஓரசைச் சொற்களை உடையதாய் இருப்பதுடன், தீபெத்திய மொழியோடு தொடர்புடையதுமாகும். இவர்களது எழுத்தும் இலக்கணமும் பாளி மொழியிலிருந்து பெறப்பட்டதற்கு பௌத்த குருமாரே காரணமாகும். பர்மியரின் பண்பாட்டில் பௌத்தசமயம் முக்கிய இடம் பெறுகிறது. மௌரியப் பேரரசன் அசோகனது காலத்தில் பர்மாவில் பௌத்தமதம் பரப்பப்பட்டது. தென்கிழக்காசியப் பகுதிகளில் இஸ்லாமிய ஆதிக்கப் படர்ச்சியால் பௌத்த பண்பாடு செல்வாக்கு இழந்தபோதும் பர்மாவில் இன்றும் பௌத்த பண்பாடு தொடர்ந்தும் வாழ்கின்றது. பர்மாவின் தலைநகரான மாண்டலே மிகப்பிரதான பௌத்த கலாசார மையமாக இற்றைவரைக்கும் தென் கிழக்காசியாவில் போற்றப்படுகின்றது.

பர்மாவில் மாண்டலே, ரங்கூன் ஆகிய இரண்டும் பெரிய நகரங் களாகும். ரங்கூன் மிக முக்கியமான துறைமுகப் பட்டினமாகும். மாண்டலே பர்மிய அரசர்களோடு வரலாற்றுத் தொடர்புடைய பட்டின மாகும்.

**மலாயா எனப்படும் மலேசியா**

மலாயா எனும் பெயர் தாய்லாந்து எல்லைக்குத் தெற்கே உள்ள குடா நாட்டுப் பிரதேசத்தைக் குறிக்க வழங்கப்பட்டு வருகிறது. இப்பிரதேசம் முன்பு சுல்தானின் பிரதேசங்களாய் இருந்து பின் மலாயாக் கூட்டரசு என அமைக்கப்பட்டது. மலேசியா எனும் பெயரை முதன் முதலில் எமேர்சன் என்பவர் 1937இல் மலாய் மொழி பேசும் மக்கள் வாழும் பிரதேசத்துக்கு வழங்கினார். மலாயா எனும் சொல் மலேயா தீபகற்பம், சிங்கப்பூர் தீவு ஆகிய இரு பகுதிகளையும் சேர்த்தே குறிக்கும்.

மலேயாவின் புவியியல், இனப்பாகுபாட்டியல், கலாசாரம் ஆகிய முறைகளில் இந்தோனேசிய மண்டலத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்றாலும், தன்னுடைய இயற்கைத் தீவுக்கூட்ட இயல்புடைய இந்தோனேசியாவிலிருந்து வேறுபட்டு யூரேசியக்

கண்டத்தின் ஒரு பகுதியாகத் தென்கிழக்குக் கோடியிலுள்ளது. தென் கிழக்காசியாவில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாதவாறு மக்கள் தொகையில் மிகுதியான பகுதியை நகரங்களில் கொண்ட நாடாகவும் உயர்தர வாழ்க்கைத் தரத்தை கொண்ட நாடாகவும் மலாயா காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்திலேயே சிங்கப்பூரை விதிவிலக் காகக் கொண்டால், இறுதியாகச் சுதந்திரம் பெற்ற நாடாக மலாயா காணப்படுகின்றது. (சிங்கப்பூர் தீவு சிறிது காலம்வரை மலேசியா சமஷ்டியில் ஒரு பகுதியாக இருந்து, பின் 1964இல் சுதந்திர நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்தியது.)

மலாயா மலைப்பாங்கான ஒரு நாடாக விளங்குகின்றது. மேலும் மத்திய கோட்டுக் காலநிலைத் தன்மையைக் கொண்டுள்ளது. மலாயாவில் வடகீழ் பருவக் காற்று ஒக்டோபரிலிருந்து மார்ச் வரை வீசும். தென்மேல் பருவக்காற்று யூன் முதல் செப்ரெம்பர் வரை வீசும். கடல்மட்ட வெப்பநிலையானது $80^{0}$ F க்கும் கீழாகவே உள்ளது. வருடத்திற்கு வருடம் மொத்த மழைவீழ்ச்சியில் வேறுபாடு காணப்படுவதற்கு உறுதியின்மையான புயல்களினால் மழைவீழ்ச்சி ஏற்படுவதே காரணமாகும்.

மலாயாவில் மிகமுக்கிய உணவுப் பொருள் உற்பத்திகளாக நெற்செய்கை, மீன் பிடித்தொழில் என்பன காணப்படுகின்றன. பிரித் தானியரால் இறப்பர் செய்கை புகுத்தப்பட்டது. அத்துடன் தென்னை, அன்னாசி, கோப்பி, தேயிலை என்பனவும் பயிரிடப்படுகின்றன. தகரம், தங்கம் போன்ற கனிய வளங்களும் காணப்படுகின்றன.

பரியோயன் டாயிட்ரோ - மலாய் எனப்படுவோர் தற்போதைய மலாய் மக்களின் முன்னோடிகள் எனக் கருதப்படுகின்றனர். சீனர், இந்தியர் போன்றோர் பிற்காலங்களில் இங்கு குடியேறினர். மலாய் மக்களின் பரபரப்பற்ற தன்மையும், குடியேறிய சீனர்களின் ஆரவாரமும், இந்தியர்களின் வாழ்வும் கலந்த ஒரு வாழ்வினை தற்கால நவீன வாழ்க்கையாக மலாயா எனும் மலேசியா கொண்டுள்ளது.

**இந்தோசீனா: கம்போடியா, லாவோஸ், வியட்நாம்**

'இந்தோ சீனா' எனும் சொல் புவியியல் ரீதியில் தென்கிழக்கு ஆசியா வில் ஒரு பிராந்தியத்தைக் குறிக்கும். அரசியல் ரீதியில் இப்பகுதி கம்போடியா, லாவோஸ், வியட்நாம் ஆகிய மூன்று தனித்தனி நாடு

களை உள்ளடக்கியுள்ளது. 1954இன் பின் கம்போடியா, லாவோஸ், வடவியட்நாம், தென்வியட்நாம் எனும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்ட பகுதி பொதுவாக 'இந்தோ சீனா' என்ற பெயரால் வழங் கப்பட்டது.

சோங்புவோங் ஆற்றிற்குத் தெற்காகக் காணப்படும் இப்பகுதி மிகப் பழைய பாறைகளாலமைந்த மத்தியதிணிவை மையமாகக் கொண்டுள்ளது. வடக்கில் ஆசியாவை மையமாகக் கொண்டு அமைந்துள்ள கண்டம்சார் காலநிலைத் தன்மைக்கும் தெற்கில் தீவுத் தொடர்பகுதியில் நிலவும் சீரான காலநிலைத் தன்மைக்கும் இடைப் பட்ட காலநிலை இங்கு காணப்படுகின்றது.

மேலும் யூன் முதல் செப்ரெம்பர் வரை தெற்கிலும் தென்மேற் கிலுமிருந்து காற்றுக்கள் வீசுகின்றன. இதனால் அயனப் பகுதிக்குரிய வெப்பம் கூடிய ஈரப்பதன் என்பன இப்பகுதிகளுக்குக் கிடைக் கின்றன. யூலை முதல் நவம்பர் வரை இங்கு அயனச் சூறாவளிகளின் தாக்கம் அதிகம் ஏற்படுகிறது. ஒழுங்கற்ற மழைவீழ்ச்சித் தன்மை காணப்படுவதால் நெல் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இது இயல் பாகவே காடடர்ந்த ஓர் பகுதியாக அமைந்துள்ளது.

இந்தோசீனாவில் இந்தியாவிலிருந்தும் தூர கிழக்கு பகுதி யிலுமிருந்தும் முன்பு வந்த மக்களின் தொடர்பு காணப்படுகின்றது. இவர்களின் செல்வாக்கை பண்பாடு, மதம், மொழி ஆகியவற்றில் காணலாம்.

1. கம்போடியா-இதன் தலைநகர் பிநோம் பென் ஆகும். இந் நாட்டின் நாணய அலகாக 'ரீல்' காணப்படுகின்றது. இங்கு 14,805,000 மக்கள் வாழ்கின்றனர். பழைய இந்துமதத் தொடர் பிற்கு மையமாகக் கம்போடியா விளங்குகின்றது. பழைய காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய மக்களும் மொங்கோலிய இனத்தவரும் கலந்த கலப்பு இனத்தவர்கள் கம்போடியாவில் சிறப்பாக வாழ்கின்றனர்.

2. லாவோஸ்-இதன் தலைநகர் வியென்தியென் ஆகும். இதன் நாணய அலகாக 'கிப்' உபயோகிக்கப்படுகின்றது. இதன் பரப்பு 236,000 சதுர கி.மீ ஆகும். இந்நாட்டில் 6,320,000 மக்கள் வாழ்கின்றனர்.

3. வியட்நாம் - ஆரம்பகாலத்தில் வியட்நாம் முழுவதும் ஒரே நாடாகத்தான் இருந்தது. பிரெஞ்சு ஆதிக்கத்தின் பின் இது வடக்கு வியட்நாம், தெற்கு வியட்நாம் எனப் பிரிந்துகொண்டது. வியட்நாம் ஒரு ஜீவ பூமி. இந்நாட்டு மக்கள் கடும் உழைப்பாளிகளாவர். வியட்நாம் முதலில் பல மன்னர்களால் ஆளப்பட்டு பின் பல அந்நியரின் தாக்குதலுக்கு உள்ளான ஒரு நாடு. இதனால் ஒரே மொழி, ஒரே இனம், ஒரே தோற்றம் கொண்ட மக்கள் இரு நாட்டவராயினர். இந் நாட்டிற்கு வடக்கே கம்யூனிஸ்ட் சீனா இருப்பதால் இங்கு கம்யூனிஷ செல்வாக்கு ஏற்பட்டது. இதனாலும் இந்நாடு போராட்டங்களுக்கும் பிரிவினைக்கும் உள்ளாகியது. பின்னர் இவ்விரு பகுதிகளும் இணைந்து ஐக்கியப்பட்ட வியட்நாமாகியது.

**இந்தோனேசியா**

இந்தோனேசியா எனும் சொல்லிற்கு இந்துக்கள் வாழும் தேசம் என்பது பொருள். உலகில் இந்தியாவிற்கு அடுத்தபடியாக இந்துக்கள் வாழும் இரண்டாவது பிரதேசம் இந்தோனேசியா ஆகும். இந்தோனேசியாவின் நான்கு இயற்கைப் பிரிவுகளாக பெரியசுந்தாப் பகுதி, சிறிய சுந்தாப்பகுதி, மெலூக்கஸ், மேற்கு கிரியான் போன்றன காணப்படுகின்றன. மேலும் இந்தோனேசியா தீவுக்கூட்டங்களில் உள்ள முக்கிய தீவுகளாக சுமாத்திரா, ஜாவா, போர்ணியோ, செலிபஸ் போன்றன அமைந்துள்ளன. இவை தவிர 3000இற்கு மேற்பட்ட தீவுக்கூட்டங்களும் சேர்ந்ததே இந்தோனேசிய இராச்சியமாகும். இந்த 3000 தீவுகளில் பாலித்தீவில் மட்டும் ஒன்றரைக் கோடி மக்கள் வாழ்கின்றனர்.

இந்தோனேசியாவில் இஸ்லாம், இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்கள் காணப்படுகின்றன. எனினும் ஒரு காலத்தில் இந்தோனேசியா முழுவதும் இந்துக்கள் வாழ்ந்ததாக சரித்திர கூறுகள் கூறுகின்றன. பின்னர் படையெடுப்புக்களின் தாக்கத்தினால் இந்தோனேசியா இராச்சியம் முஸ்லீம்களின் இராச்சியமாக மாறியது. இங்கு மதத்திற்கு முதலிடம் தரப்படுகிறது. அடுத்தபடியாகத்தான் அரசியல் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தோனேசியாவைத் தாயமாகக் கொண்ட அனைவரும் இந்தோ னேசியர்கள் என்ற பெயரால் அழைக்கப்படுவர். ஒரு காலத்தில் கிழக்கிந்தியத்தீவுகள் என அழைக்கப்பட்ட தீவுக் கூட்டங்களே இன்றைய இந்தோனேசியாவாகும். இந்தோனேசியாவின் மொழியாக பொனீஷிய மொழி பேசப்படுகிறது. இந்தோனேசியாவின் முக்கியத் தீவுகளை சற்று விரிவாகப் பார்ப்போம்.

i. சுமத்திரா: சுமாத்திரா போர்ணியோவுக்கும் யாவாவுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளது. இது 16000 மைல் நீளம் உடையது. சுமத்திராவைச் சூழப் பல தீவுகள் உள்ளன. இந்துசமுத்திரப் பகுதியில் சுமாத்திராவுக்குச் சமாந்தரமாக நசோ - எமந்தாவைத் தீவுகள் அமைந்துள்ளன.

சுமாத்திராவில் கோக்கேசிய இனத்தவர், மொங்கோலிய இனத்தவர் ஆகியோர் குடியேறியுள்ளனர். இங்கு மூவகையான மக்கள் வாழ கின்றனர், மேனாங்காபோ வகுப்பினர், பாடாகலாம்பூங்கர் மக்கள், ஆச்சேகர் மக்கள் ஆகியோரே அம்மக்கள். பயிர்ச்செய்கை, கனிப் பொருள் அகழ்தல் போன்றவற்றுக்காக சீனர்களும் குடியேறியுள்ளனர். இங்கு நெல், இறப்பர், புகையிலை, கோப்பி, தேயிலை என்பன பயிரிடப்படுவதுடன் தங்கம், எண்ணெய் போன்றவை அகழ்ந் தெடுக்கப்படுகின்றன.

ii. யாவா: யாவா 600 மைலுக்கும் சற்றுக் கூடிய நீளத்தைக் கொண்ட தீவாகும். மலாயாவின் வடபாகங்களிலும் பார்க்க மத்திய கோட்டி லிருந்து தூரத்தில் காணப்படுகின்றது. இங்கு சுண்ணக் கற்பீடங்கள், பள்ளத்தாக்குத் தொடர், எரிமலைத் தொடர், வண்டல் வலயம் என்பன காணப்படுகின்றன. யாவாவில் 3 பகுதியில் ஆறுகள் வடக்கு நோக்கி ஓடி யாவாக் கடலில் விழுகின்றன. வர்த்தகத்தில் தேக்குமரச் செய்கை முக்கியமானதாகும். இங்கு குடித்தொகை, பயிர் செய்கை என்பன செறிவாக உள்ளன. தேயிலை, கரும்பு, சோளம், மரவள்ளி போன்றன இங்கு பயிரிடப்படுகின்றன.

யாவா மக்கள் ஒருமைப்பாடு கூடியவர்கள். இவர்கள் மூன்று முக்கிய மொழிகளைப் பேசுகின்றனர். இங்கு பெருமைமிக்க அடிப் படைப் பண்பாட்டு நிலைமை இஸ்லாமிய செல்வாக்கினால் இன்று ஓரளவு மாற்றமடைந்துள்ளது. கி.பி. க்குப்பின் முதல் ஆயிரம் ஆண்டுக்

காலம் இங்கு இந்திய குடியேற்ற நாட்டாட்சிக் காலமாகும். இக் காலத்தில் இந்து, பௌத்தப் பண்பாட்டுச்செல்வாக்குகள் இவ்விடத் தில் பரவியிருந்தன. இதற்குச் சான்றாக போரப்புதூர், பிளித்தார், கேடுஸ் ஆகிய இடங்களில் கல்லினால் அமைந்த அழிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. டச்சுக்காரரர் ஆட்சிக் காலத்தில் சீனர்கள் இங்கு குடியேறினர்.

iii. போர்ணியோ: மேற்கு தீவுகளில் மிகப் பெரிய தீவாக இது விளங்குகின்றது. போர்ணியோ எனும் பதம் புரூணை என்பதன் அடிப்படையாக ஏற்பட்டது. இத்தீவு இந்தோனேசியா (73%), மலேசியா (26%), புரூணை (1%) ஆகிய மூன்று நாடுகளிடையே பங்கிடப்பட்டுள்ளது. இது மத்திய கோட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. போர்ணியோ குன்றுகளைக் கொண்ட தரையமைப்பையுடையது. போர்ணியோவில் மண் வளங்குறைந்ததாகவும் ஆறுகள் போக்கு வரத்திற்கு ஏற்ற தன்மையற்றவையாகவும் காணப்படுகின்றன.

போர்ணியோவின் உட்பகுதியில் சுதேசிகள் சிறுதொகையினராக வாழ்கின்றனர். கரையோரப் பகுதியில் அயற்பிரதேசங்களிலிருந்து வந்த சீனரும், மலாயரும் வாழ்கின்றனர். உட்பகுதியில் வாழ்கின்ற மக்கள் தையக்கர் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகின்றனர். ஆனால் பண்பாட்டால் வேறுபட்ட கூட்டத்தவர் அவர்களிடையே காணப்படுகின்றனர்.

iv. செலிபீஸ்: யாவாவிலும் பார்க்க செலிபீஸ் பெரிதாகவுள்ளபோதும் இது பல ஒடுங்கிய நிலப்பிரிவுகளாக அமைந்துள்ளது. இது பெரும் பாலும் மலைசார்ந்த தீவாகும். இத்தீவு முழுவதும் ஈரமும் வெப்பமு மான காலநிலையும் நிலவுகின்றது. இங்குள்ள ஆறுகளில் அதிக நீர் காணப்படுகிறது. இங்கு பொன், நிக்கல், இரும்புத்தாது, பெற்றோலியம் போன்ற கனிய வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு 70 இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் வாழ்கின்றனர்.

v. பாலித்தீவும் லொம்பொக்தீனம்: பாலி முதல் தீமோர் வரையுள்ள தீவுகள் சண்டாமேடைச் சிறுதீவுகள் என வழங்கப்படுகின்றன. இவற்றுள் பாலியும் லொம்பொக்குமே குடியடர்த்தி கூடிய தீவு களாகும். இத்தீவுகளின் தென்பாகம் தாழ்வான சுண்ணக்கல் மேட்டு

நிலமாக உள்ளது. பாலித்தீவில் வாழும் மக்கள் இன்றும் இந்து சமயத்தவராகக் காணப்படுகின்றனர். யாவாவின் உயர்சாதி இந்துக்களின் வழித்தோன்றல்களே இவர்கள். இஸ்லாமிய மதத்தாக்கம் யாவாவில் இடம்பெற்றபோது இந்துக்கள் கிழக்கு நோக்கிப் பெயர்ந்தனர். பாலித் தீவில் வாழும் மக்கள் ஏனைய தீவுகளில் வாழும் மக்களைவிட கலைத்துறையில் மேம்பட்டவராக உள்ளனர்.

லொம்பொக்தீவில் பாலித்தீவினரிலும் பார்க்க முஸ்லிம் மதச் சார்புடைய சகக் மக்களே அதிகம் வாழ்கின்றனர். பாலித்தீவினர் நுண்ணிய சிற்ப வேலையில் புகழ் பெற்றவராயுள்ளனர். நெசவுத் தொழில், பன்றி வளர்ப்பு என்பன முக்கியம் பெற்றுள்ளன.

### பிலிப்பைன்ஸ் தீவுகள்

பிலிப்பைன்ஸ் தீவுகளின் மொத்தப்பரப்பில் 95 சதவீதமான பகுதியைப் பதினொரு தீவுகள் அடக்கியுள்ளன. எஞ்சிய 7000 தீவுகளும் மிகச் சிறியன. பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டம் ஆசியாக் கண்டத்திலிருந்து ஆழமான கடலாற் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் கிழக்கில் உலகிலேயே மிக ஆழமான பசுபிக் சமுத்திரப் பகுதி உள்ளது. வடக்கு, தெற்காகப் பரந்துள்ள இத்தீவுக்கூட்டம் பசுபிக் ஓரத்தைச் சார்ந்துள்ள எரிமலைத்தீவு வலயத்தின் ஒரு பகுதியாகவும் விளங்குகின்றது. உறுதியற்ற அமைவையுடைய இப்பகுதியில் எரிமலைகளும் புவிநடுக்கமும் உண்டாகின்றன.

இங்கு பல்வேறு இன மக்கள் வாழ்கின்றனர். முதலில் மலாய் இனத்தவர் குடியேறினர். 1565இல் ஸ்பானியரது தாக்கம் இடம்பெற்றது. இவர்கள் மணிலாவை மையமாகக் கொண்டு கிறிஸ்தவ மதம், ஸ்பானிய பண்பாடு என்பவற்றைப் பிற பகுதிக்குப் பரப்பினர். பிலிப் பைன்ஸ் மக்கள் மலாயர், ஸ்பானியர், சீனருடன் கலப்புண்டுள்ளனர். இங்கு ஸ்பானிய, அமெரிக்க ஆதிக்கம் ஏற்பட்டு 1946இல் சுதந்திரப் பிரகடனம் இடம்பெற்றது.